யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## இனப் பிரச்னைக்கு சாதகமான ஒரு தீர்வு ஏற்படும் வரை
# பூநகரி ராணுவ முகாமை அகற்றமுடியாது

விலை ரூபா 5-00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 18 இதழ் 53
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 01-4-1995

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)
இனப் பிரச்னைக்கு சாதகமான தீர்வு ஒன்று ஏற்படும் வரையில் பூநகரி இராணுவ முகாமை அங்கிருந்து அகற்ற முடியாது.

இனப்பிரச்னைக்கு சாதகமான நிரந்தரமான முடிவு ஒன்று காணப்படும்போது பூநகரி இராணுவ முகாமை அகற்றும் விடயத்தில் அரசு சாதகமான முடிவு ஒன்றை மேற்கொள்ளும்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனாதிபதி மேலும் தகவல் தருகையில கூறியதாவது:

பூநகரி இராணுவ முகாமை 600 மீட்டருக்கு அப்பால் அகற்றுவதற்கு அரசு ஏற்

(2ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பத்திரிகை செயலாளர் இராஜினாமா

[கொழும்பு]
ஜனாதிபதியின் பத்திரிகைச் செயலர் சூலவன்ச சிறிலால் நேற்று தமது பதவியை ராஜினாமா செய்தார்

பத்திரிகை சுதந்திரத்தை உறுதிப்படுத்த தாம்பத்திரிகையாளர்களுடன் இணைந்து செயலாற்றப்போவதாக திரு. சூலவன்ச வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இ

## இல. பொலிஸார் தாக்குதல்

# விடுதலைப்புலி போராளி ஒருவர் சயனைட் அருந்தி வீரச்சாவு!

## கிழக்கில் பெரிய போர் நிறுத்த மீறல்

[மட்டக்களப்பு]
கிழக்கில் பெரிய போர் இடை நிறுத்த மீறலாக மட்டக்களப்பில் சிறிலங்கா பொலிசார் விடுதலைப் புலிகள் இயக்க போராளி ஒருவரை தாக்கியபோது அப் போராளி சயனைட் அருந்தி வீரச்சாவு அடைந்த சம்பவம் கடந்த புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மண்டூரில் இருந்து மிதிவண்டியில் வாஞ்சிக்குடி வைத்திய சாலைக்குச் சென்றுகொண்டிருந்த லெப். சிறினிவாசன் என்ற விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் குருமண்வெளியில் வைத்து சிறலங்கா பொலிசாரால் தடுத்துநிறுத்தப்பட்டார்.

தடுத்து நிறுத்தப்பட்ட

(4ம் பக்கம் பார்க்க[

## தமிழ்ச் செல்வன் அமைச்சர் ரத்வத்தவுக்கு ஆட்சேப கடிதம்!

(யாழ்ப்பாணம்)
சிறிலங்கா பொலிசாரால் போர் இடைநிறுத்தம் மீறப்பட்ட சம்பவம தொடர்பாக கடும் ஆட்சேபம் தெரிவித்து தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;- மட்டக்களப்பு மண்டூரில் 1995 மார்ச் 29-ம் திகதி விடுதலைப்புலிகள் இயக்க போராளி ஒருவர் இலங்கை பொலிசாரினல் அடித்துத் துன்புறுத்தப்பட்டதன் விளைவாக வீரச்சாவு

(4ம் பக்கம் பார்க்க)

## தலைவர்பிரபா யோசனைகளை அரசு தீவிர பரிசீலனை

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் இறுதியாக எழுதியிருக்கும் கடிதத்தில் தெரிவித்துள்ள யோசனைகளை அரசாங்கம் தீவிரமாக பரிசீலனை செய்துவருகின்றது என்று நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விகாரத்தை நாம்

(4ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுபாதை திறப்பது ராணுவத்திற்கு பாதுகாப்பு

(கொழும்பு)
வடபகுதி தமிழ் பொதுமக்களின் போக்குவரத்திற்காக பூநகரிப் பாதையை திறப்பதைவிட ஆனையிறவுப் பாதையை திறப்பது இராணுவத்தினரின் நலனிற்கு பாதுகாப்பானது என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெரி டி. சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்: பூநகரிப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கு நிலைகுறித்து அமைச்சர்-எம்பிகள் பேச்சு

(கொழும்பு)
வடக்கு—கிழக்கு மாகாணத்தில் நிர்வாக ரீதியாக நிலவும் பல்வேறுபட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக அமைச்சர் ஜி. எல். பீரிஸிடம் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவும் கடந்த வியாழன் வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எம், பிககளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்

(4ம் பக்கம் பார்க்க]

## வெட்டுபுள்ளி விவகாரம் கல்வி அமைச்சுக்கு விளக்கம்

(கொழும்பு)
வெட்டுப்புள்ளி முறையால் பாதிக்கப்பட்டவர்களில யாழ்ப்பாண மாணவர்கள் எட்டுப்பேர் நேற்று முன்தினம் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரனவைச் சந்தித்து தமது பிரச்னைகளை எடுத்துரைத்தார்கள்.

யாழ். மாவட்ட எம். பி. டக்ளஸ் தேவானந்தாவின்

(4-ம் பக்கம் பார்க்க)

## காணமல் போனோர் விவகாரம்
## விசாரணைகளை நீடிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கொழும்பு)
1930-ம் ஆண்டுக்கும் 1990-ம் ஆண்டுக்குமிடைப் பட்ட காலத்தில் காணமல் போனவர்களைப் பற்றி விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா பண்டார பண்டாரநாயக்கா குமாரதுங்காவினல் நியமிக்கப்பட்ட மூன்று விசாரணைக்குழுக்களின் விசாரணைகள் நேற்றுடன் முடி

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ அடுத்த சுற்றுப் பேச்சுக்களில்
## மூத்த அமைச்சர் தலைமையில் அரசகுழு கலந்து கொள்ளும்!

(கொழும்பு)
புலிகளுடன் நடத்தும் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு செல்லவிருக்கும் குழுவிற்கு சிரேஷ்ட அமைச்சர் ஒருவரே தலைமை தாங்க இருக்கிறார் என்று உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு விரைவில் புதியதிகதியை முடிவுசெய்வது குறித்து அரசு விடுதலை புலிகளுக்கு பதில் கடிதம் எழுதப் போவதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியப் பயணம் முடித்து நாடு திரும்பியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பேச்சு வார்த்தைக்கான புதிய திகதியை முடிவு செய்வார் எனத் தெரிகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

### வரி விளம்பரம்

**வெற்றுப்போத்தல் கொள்வனவு**

வெற்றுக் கோடியல் போத்தல் ஒன்று 10 ரூபா ஆகவும் வெற்று ஜாம் போத்தல் ஒன்று 08 ரூபா ஆகவும் கொள்வனவு செய்யப்படும். தொடர்புகளுக்கு சுரபி நிறுவனம், கோப்பாய் தெற்கு, கோப்பாய். வானவில், ஆரியகுளம்சந்தி யாழ்ப்பாணம். (ஏ-4851)

## இன்று

[கொழும்புத்துறை]

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று 1ம் திகதி சனிக்கிழமை மாலை ஸ்ரீராம நவமி விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகள் நடைபெறும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பறுளாய் ஸ்ரீசிவ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் இன்று 1ம் திகதி சனிக்கிழமை இலட்சார்ச்சனை ஆரம்பமாகி ஆறுதினங்கள் நடைபெறும்.

### இருபாம்புகள் கொல்லப்பட்டன

மானிப்பாய்)

கோம்பயன்மணல் மயானத்தில் சுமார் நாலரை அடி நீளமுடைய இரு கண்ணுடிப் புடையன் பாம்புகள் மயான பாதுகாவலர்களினால் நேற்று முன்தினம் காலை அடித்துக் கொல்லப்பட்டன.

இருபாம்புகளும் நீளக் கம்பியினால் குத்திய நிலையில் மயான வாசலில் வைக்கப்பட்டிருந்ததை ஏராளமான மக்கள் பார்த்துச் சென்றனர்.

71-சி

### இனப்பிரச்சனை

**(1-ம் பக்கத் தொடர்ச்சி)**

கனவே முடிவு செய்துவிட்டது. இனப்பிரச்னைக்கு சாதகமான ஒரு முடிவு ஏற்படும் வரை இந்த விடயத்தில் வேறு எந்தவித மாற்றமும் இருக்காது

பூநகரி முகாமை பொறுத்த வரையில் அரசின் இப்போதைய உறுதியான நிலைப்பாடு இதுவாகும் என்றார்.

விடுதலைப புலிகள் அரசுக்கு விதித்திருந்த காலக்கெடு நீடிக்கப்பட்டிருப்பது தொடர்பாக பத்திரிகையாளர்கள் அவரிடம் வினவியபோது அவர் கூறியதாவது:

தொடர்ந்தும் நாம் இந்த நிலையிலேயே இருப்போம் எவருடைய காலக்கெடுவையும் நாம் ஏற்றிக்கொள்ள முடியாது. இ-ரி


**அறிவித்தல்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 14வது தொகுதி மாணவர்களுக்கான [1991/92 தொகுதி) விரிவுரைகள் 17-04 1995இல்ஆரம்பமாகும். தவறுது சமூகமளிக்குமாறுகேட்டுக் கொள்ளப்படுகின்ருர்கள்.

பதிவாளர்

(சி-4833)


### பெறுமதி மிக்க முத்திரைகள்

(கொழும்புத்துறை)

யாழ் பிரதம தபாலகத்திற்கு 1,000ரூபா, 500ரூபா, 100 ரூபா, 50 ரூபா பெறுமதியான முத்திரைகள் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் வந்து சேர்ந்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-155

# மாகாண கூட்டுறவு வங்கி வட-கிழக்கில் அமைக்கப்படும்

(தாளையடி)

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு வங்கி ஒன்று அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

அண்மையில் திருகோணமலையில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. பா. லிங்கநாதன் தலைமையில் வடக்கு-கிழக்கு மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுசபை தலைவர்கள் செயலாளர்கள் கலந்து கொண்ட மகாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு வங்கி அமைப்பதற்கு முன்னோடி நடவடிக்கையாக மாவட்டங்களில் உள்ள கிராமிய வங்கிகள் அனைத்தையும் இணைத்து மாவட்ட கிராமிய வங்கிகள் சமாசம் ஆரம்பிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அங்கு எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஏற்பட்ட நட்டத்தில் இருபத்தைந்து வீதத்தை சங்கங்களுக்கு வழங்குமாறு கோருதல்.

புதிய அரசாங்கம் மாவிலைகுறைவு செய்தபோது இப்பகுதி ப. நோ. கூ சங்கங்களுக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது மா விலைக்குறைபின் மூலம் சங்கங்களுக்கு ஏற்பட்ட நட்டத்தை அரசாங்கத்தைக் கோருதல் என்பனவாகும்.

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுச்சபை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த வருடம் ஆவணிமாதத்திற்கு முன் வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவுச்சபை இயங்க கூடிய வகையில் உபவிதிகள் தயாரித்தல் இது சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஐந்து பேர் கொண்ட உபகுழுஒன்று நியமிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட கூட்டுறவுச்சபை தலைவர் தலைவராகவும்வவுனியா மாவட்ட கூட்டுறவுச்சபை தலைவர் செயலாளராகவும் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபைத்தலைவர். கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் திரு. எம். கே, முருகையா ஆகியோர் உபகுழுவின் உறுப்பினராகவும்தெரிவு செய்யப்பட்டனர். -163

மட்டக்களப்பில்

## மாவீரர் படங்களை பொலிஸார் அகற்றுகின்றனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதி வீதிச் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த மாவீரர்களின படங்களை அகற்றுவதில் பொலிசார் ஈடுபட்டு வருகின்றனராம்.

இப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் பொலிசார் தமது காவலரண்களைப் பலப்படுத்துவதிலும் கண்காணிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியும் வருகிறுர்களாம்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் அமுல் படுத்தப்பட்டுவரும் இவ்வேளையில் இதுபோன்ற நடவடிக்கைகள் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு பகுதியில் படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இளம் தமிழ்ப் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டுள்ளார். க-சி

# வறிய மக்களுக்கு அரசு உதவிப்பணம்

(கொழும்பு)

வறுமைக்கோட்டில் வாழும் சுமார் 12 லட்சம் மக்கள் மாதாந்தம் 500 ரூபாவையும், ஒரு லட்சம் மக்கள் மாதாந்தம் ஆயிரம் ரூபாவையும் உதவிப் பணமாக பெறவுள்ளார்கள்.

இத்தகவலை பிரதி நிதி அமைச்சர் பேராசியர் ஜி.எல். பீரிஸ் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இதுபற்றி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வறிய மக்களுக்கான மேற்படி கொடுப்பனவு எதிர்வரும் யூன் மாதம் வழங்கப்படும். அரசாங்கத்தின் சுபீட்சத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இப்பணத்தினுல் வறிய மக்கள் தமது வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியுமென்று அமைச்சர் கூறினுர். -வி-இ


**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**

**யாழ். கிளைத்தலைமையகம்**

யாழ். கிளையின் உதவி அரசாங்க பிரிவுகளில் இயங்கும்இ. செ. சி.சங்க 14 பிரிவுகளிலும் கிளிநொச்சி கிளையின்பளைப்பிரிவிலும் 02 04-95 மு. ப 10 மணிக்கு அவ்வப்பிரிவு ஆண்டுப் பொதுக்கூட்டமும் தேர்தலும் பிரிவுகளால் ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் நடைபெறவுள்ளன. கூட்டம் நடைபெறும் முறைகளும் தேர்தல் நடைபெறும் முறைகளும் வாக்குச் சீட்டுக்களும் அவ்வப்பிரிவு தலைவர்/ செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன. பிரிவிலும், கிளையிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள, அங்கத்தவர் பட்டியலில் உள்ள பெயர்களையுடைய உறுப்பினர்கள் தயவு செய்து அவர்களுடைய பிரிவ ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தவருது பங்கு பற்றும்படி வேண்டப்படுகிருர்கள்.

நன்றி

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,

யாழ்ப்பாணம்.

29-03-1995 (ஏ-4855)



வெளிவந்து விட்டது

**அஷ்டலக்ஷ்மியின் அற்புத வெளியீடுகள்**

ஆண்டு 5 தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பயன்படக்கூடிய

**பொது அறிவுக்களஞ்சியம்**

4000 வினுவிடைகள் 180 பக்கங்கள்

ரூபா 90/-

நினைத்த காரியம் கைகூட, நோய்கள் அகல வழக்குகளில் வெற்றிபெற, கண்ணொளிபெற மற்றும் பல சித்திகள் அடங்கிய சமயகுரவர் அருளிய 34 பதிகங்கள் கொண்ட

**தமிழ்வேதத்திரட்டு**

120 பக்கங்கள் ரூபா 50/–

சிறப்புப்பிரதி 75/–

கிடைக்குமிடங்கள்

ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை யாழ்ப்பாணம்

சிவா அச்சகம் கைதடி,

(சி-1428)


## அபிவிருத்தி நிகழ்ச்சி திட்ட உதவியாளர் நியமனம்

(மானிப்பாய்)

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் நியமனங்களை 01-06-95 முதல் வழங்குவதற்கு, வேலைவாய்ப்புப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நியமனங்கள் யாவும் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை. யாழ். மாவட்டத்திற்கான நியமனங்கள் பற்றி இதுவரை எதுவுமே தெரிவிக்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 71-சி

# 147 வயது நபர் சீனுவில் காலமானுர்

(பீக்கிங்)

சீனுவில் மிகவும் நீண்ட காலம் வாழ்ந்த 147 வயதான ஒருவர் நேற்று முன்தினம் ஷங்காய்ப் பகுதியில் காலமானுர்.

தமது வாழ்வில் ஒருபோதும் புகை பிடிப்பதில்லை என்றும், பிரமச்சாரிய விரதத்தைப் பேணுவதும், கடின உழைப்புமே தமது நீண்ட ஆயுளுக்குக் காரணம் என்று அவர் முன்னர் தெரிவித்திருந்தாக ஷங்காய் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சீனுவில் 100 வயதுக்கு மேல் வாழ்வோர் தொகை அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது. க-சி

யாழ்–பல்கலைக்கழகத்தில்

## மருத்துவ கண்காட்சி நாளை ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் நோக்குடன் நாளை 2ம் திகதி முதல் எதிர்வரும் 9ம் திகதிவரை யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

மருத்துவக் கண்காட்சி 9 பிரிவுகளாக நடைபெறும். அவையாவன நரம்பு - மூளை தொகுதி, சிறுநீரக சனனித் தொகுதி, உளவியல் பகுதி, சுற்றோட்டத் தொகுதி, சுவாசத் தொகுதி, பற் சுகாதாரம், அகச்சுரப்பிகள், உணவுக் கால்வாய்த் தொகுதி, ஏனைய தொகுதிகளும் முதலுதவியும், சுகவாழ்விற்கான வழிமுறைகள்.

ஒவ்வொரு தொகுதியினதும் அமைப்பு, தொழிற்பாடு, நோய்கள், அவற்றைத் தடுக்கும் வழிமுறைகள், அவற்றினுல் ஏற்படும் சிக்கல்கள் என்பன விளக்கப்படும். அனேகமான பகுதிகளில் தவிர்க்கப்படவேண்டிய விடயங்கள் சுட்டிக்காட்டப்படும். ஆனுல் சுகவாழ்விற்கான வழிமுறைகள் பகுதியிலும் முதலுதவிப்பகுதியிலும் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய, கடைப்பிடிக்கக் கூடிய வழிமுறைகள் விபரிக்கப்படும்.

கண்காட்சியைப் பார்க்க வருபவர்கள் இடையிடையே தமது குருதி அமுக்கம், மூளையின் செயற்பாடு, நிறை-உயரம் போன்றவைகளை ரூ. 1/- முதல் ரூ. 5/ வரையான சிறு கட்டணம்செலுத்தி அளவிடக் கூடியதாக இருக்கும்.

இனம் காக்கும் இளைஞர் நாம்
வனம் காப்போம் வாரீர்

நல்லூர் கிளை நூலகம்



### மணிவாக்கு

ஒருவர்தான் செய்யும தவறுகளை ஒப்புக்கொள்வதுதான் உள்ளத் தூய்மையைக் காட்டும் வழி. நீரோட்டத்தின் அடியில் அழுக்கு இருப்பதை நாம காண முடிகிறது. என்ருல் நீர் தெளிந்த நீர் என்பது பொருள்.

- அலெக்சாண்டர் போப்

# தங்காலையில் ஆயுதபாணிகளால் பல கோடி ரூபா கொள்ளை

(கொழும்பு)

தெற்கில் தங்காலை மாவட்டத்தில் கடந்த வாரம் முகமூடி அணிந்த ஆயுதக் கொள்ளையர், பல பகுதிகளிலும் பல கோடி ரூபாவைக் கொள்ளை அடித்துள்ளனர்.

திஸதபாவேவ, வீரகெட்டிய பகுதியில பத்துக்கும் மேற்பட்ட முகமூடி அணிந்த ஆயுதபாணிகள். 12 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இப்பகுதியில் வீடு ஒன்றினுள் நுழைந்த மேற்படி ஆயுதக் குழு, அந்த வீட்டைச் சூறையாடியுள்ளது. அங்கு சுமார் நான்கு மணித்தியாலங்கள் தங்கியிருந்து இக்கொள்ளையை நடத்தியுள்ளது. இதில் சுமார் ஐந்தரை லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வீரகெட்டிய பகுதியில் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு லட்சம் ரூபா பணத்துடன் சென்ற ஒருவரை வழிமறித்த ஆயுதபாணிகள், அவரைக் கடுமையாகத் தாக்கி அவரிடம் இருந்த பணத்தைக் கொள்ளை அடித்துள்ளது.

இந்தக் கொள்ளைகளில் ஈடுபடுவோர் நாசகார வேலைகளுக்காகவே பணத்தைச் சேகரிப்பதாகத் தாங்கள் சந்தேகப்படுவதாகவும், ஜே.வி.பி. காலத்தில் சிறை வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டவர்களே இந்தக் கொள்ளைகளில் ஈடுபடலாம் எனத் தாங்கள் கருதுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்,

தெற்கில் மீண்டும் ஜே வி பி.யினர் மீண்டும் வளர்ந்து வருவதையே இது காட்டுவதாகப் புலனாய்வுத்துறையினர் கூறியுள்ளனர். கடந்த ஒரு மாதத்தில் 20க்கும் மேற்பட்ட பாரிய கொள்ளைச் சம்பவங்கள், தெற்கின் பல பகுதிகளிலும் இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். -சி

## நமது நோக்கு

### தமிழீழ வைத்திய முறை

''தமிழீழத்தின் பாரம்பரிய வைத்தியமுறை நவீனமயப்படுத் தப்பட வேண்டும்!'' என சுதேச வைத்தியர் செல்வி மங்களாம்பிகை புலிகளின்குரல் 'தரிசனம்' நிகழ்ச்சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு இனம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமாயின் அதன் கலை பண்பாடுகள் பேணிப் பாதுகாக்கப்படுவதோடு, வாழ்வின் பிரதான அம்சமாகிவிட்ட வைத்திய முறைகளையும் பேணிக் காத்திட வேண்டும்.

அதுமாத்திரமல்ல - துரிதமாக மாறிவரும் தொழில்நுட்ப வசதிகளின் அடிப்படையில் வளர்ந்து வரும் ஏனைய மருத்துவ முறைகளின் போட்டிக்கும் ஈடுகொடுக்க வேண்டுமல்லவா?

சுதேச வைத்தியமுறையில் உள்ளூரில் கிடைக்கும் மூலிகைகளைப் பயன்படுத்தி மருந்துகள் இன்னும் பழைய முறைகளிலேயே தயாரிக்கப்படுகின்றன.

அப்படித் தயாரிக்கப்படும் மருந்துகளின் மணம், சுவை, செய்யப்படும் முறை போன்ற சில குறைபாடுகளினுல் மக்களின் அருவருப்பும் முகம் சுளிப்பும் காணப்படுகின்றன.

எனவேதான் - நவீனமயப்படுத்தலின் அவசியத்தை அவர் அப்பேட்டியில் வலியுறுத்தினுர்.

இதனைச் செய்ய வேண்டியவர்கள் யார்? நாமேதான்!

ஏனெனில் - அண்மையில் அரச முதலீட்டுச் சபை அனுமதி அளித்த 14 முதலீடுகளில் ஒன்று ஆயுள்வேத வைத்திய சாலை ஒன்றை திசமஹராவில் நிறுவுதல்.

200 படுக்கைகளைக் கொண்ட இது ஜேர்மனிய முதலீட்டாளர் ஒருவரின் பங்களிப்போடு நிறுவப்படவுள்ளது. நவீன வசதிகளோடு, ஆயுள்வேத மருந்துகள், எண்ணெவகைகள் தயாரிக்கப்பட உள்ளன.

அத்தோடு - மூலிகைத் தோட்டம் ஒன்றும் நிறுவப்பட உள்ளது.

ஒற்றையாட்சியின் கீழ் சகலருக்கும் சமத்துவம் என்று வாயளவில் கூறப்பட்டாலும், கவனம் தெற்கிலேதான் என்பதற்கு மேலும் ஒரு உதாரணம் இதுவல்லவா?

எனவேதான் - எமது பாரம்பரிய சுதேச வைத்திய முறையை நவீன மயப்படுத்த, அன்னிய உதவிகளையும் தொழில் நுட்பங்களையும் பெற்றிட நாமே வழி காண வேண்டுமல்லவா?

# வடமராட்சி கடற் பரப்பில் இந்திய மீனவர் அடாவடித்தனம்

(தாளையடி)

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குக் கடற் பிரதேசத்தில் கரைக்குச் சமீபமாக இந்திய இழுவைப் படகுகள் தொடர்ச்சியாக இழுவைத் தொழில் செய்வதில் ஈடுபட்டுள்ளன.

இரவு பகல் வேளைகளில் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுவதால், இப்பகுதிக் கடற்றெழிலாளர்கள் இரவு பகல் வேளைகளில் கடற்றெழில் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இழுவைப் படகுகளால் வெட்டிச சேதமாக்கப்பட்டதுடன், தாளையடியைச் சேர்ந்த மா. றூபட் என்பவருக்குச் சொநதமான சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வழிச்சல் வலைகளும் காணுமற்போயுள்ளன.

இழுவைத் தொழிலில் ஈடுபட்டுவரும் இந்திய இழுவைப் படகுகள், எமது கடற் பிரதேசத்தில் பெருமளவில் சங்கு, இறுல்களைப பிடித்துச் செல்வதாகத் தெரியவருகின்றது. 163-சி

# இஸ்ரேலிய மொஸாட்டே ராஜீவை கொலை செய்தது

## சேஷன் கூறியதாக சுப்பிரமணியசுவாமி

(புதுடில்லி)

முன்னுள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்தது, இஸ்ரேலிய உளவுப் பிரிவின் 'மொசாட்' அமைப்பே என இந்தியத் தேர்தல் ஆணையாளர் ரி. என். சேஷன் தம்மிடம் தெரிவித்ததாக சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன் தினம் பத்திரிகையாளர் மத்தியில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்: ராஜீவ் கொலை செய்யப்பட்ட மறுநாள் திரு. சேஷன் தம்மை வந்து சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக ஏதாவது ஆதாரம் உண்டா? எனத் தாம் வினவியபோது, தம்மை உள்துறை அமைச்சராக நியமித்தால் இவ்விடயம் தொடர்பான முழு விபரங்களையும அறியத் தருவதாகவும் அவர் தெரிவித்தார் எனவும் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார்.

இதேவேளை, ராஜீவ் கொலை தொடர்பாக இவ்வளவு காலமும் இது பற்றி அறிவிக்காமல் மௌனம் சாதித்த சுப்பிரமணிய சுவாமி, தற்போது இத்தகைய கருத்தை வெளியிட்டதன் மர்மம் என்ன? என்பது குறித்து ஆச்சரியம் வெளியிடப்பட்டுள்ளது. க-சி

## இராசி பலன்

01-04-1995

சனிக்கிழமை

**(தமிழுக்கு பங்குனி-18)**

பிரதமை முற்பகல் 9-04 வரை; ரேவதி மரணயோகம் முற்பகல் 10-32 வரை, இராகு காலம் காலை 9-11 முதல் 10-41 வரை சுபவேளை மாலை 3-11 முதல் 4-41 வரை.

மேடம்- பொதுப் பணிச் சிறப்பு தனலாபம், பெருமை?

இடபம்- பழைய நினைவுகள், சகோதரி கவலை, வேதனை.

மிதுனம்- மேலோர் நட்பு, தாயார் உதவி, பயணம்.

கடகம்- தொழில் லாபம், மனக்களிப்பு, குடும்ப உறவு.

சிங்கம்- பதட்டமடைதல், இனசனப்பகை, அலைச்சல்.

கன்னி- தொழில் சிக்கல். அமைதியின்மை, பெண் துன்பம்.

துலாம்- நினைத்ததை சாதித்தல, மனதியானம் பணவரவு.

விருச்சிகம்- வெளியூர் செய்தி, இனிய வார்த்தை, உல்லாசம்.

தனுசு- தாழ்ந்தநிலை, கௌரவமின்மை, வெறுப்பு.

மகரம்- குடும்பவேற்றுமை, யாமனுர் தொல்லை, வீண்விரயம்.

கும்பம்- எதிர்பாராத சந்திப்பு, மனைவிபெருமை, புகழ்.

மீனம்- மனவேதனை, அடிமைநிலை, தொழில் பகை,

— ஜோஸ்யர்

# பாதை விவகாரத்தில் விட்டுக்கொடுத்து பேசுங்கள்

(லண்டன்)

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே தொடரப்போகும் பேச்சுவார்த்தையின்போது பாதை திறப்பு விவகாரம் தொடர்பாக விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டுமென விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரனுக்கும் ஜனுதிபதி சந்திரிகாவுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஹொங்கொங்கில் செயற்படும் பாதுகாப்பிற்கும் ஒற்றுமைக்குமான அமைப்பே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

அரசு—புலிகள் பேச்சுவார்த்தையில் பூநகரி பாதை திறப்பு விவகாரம் தொடர்பாக முட்டுக்கட்டை ஏற்பட்டதையடுத்தே மேற்கண்டவாறு அவ்வமைப்பு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. —— க-சி

### செஞ்சிலுவை தேர்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைமையகத்தில் கீழ்வரும் பிரிவுகளில் நாளை 2ம் திகதி பின்வரும் பதவிகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது,

ஊர்காவற்றுறை- தலைவர், பொருளாளர்; சங்கானை- தலைவர் சண்டிலிப்பாய்- தலைவர் தெல்லிப்பளை- உப- தலைவர், உடுவில்- உப- தலைவர், செயற்குழு உறுப்பினர்: நல்லூர் உப. தலைவர், யாழ்ப்பாணம்- செயற்குழு உறுப்பினர், சாவகச்சேரி- உபதலைவர் கோப்பாய்- தலைவர், உபதலைவர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர், பதவிகளுக்கே இத் தேர்தல் நடைபெறும்.

### கல்விநெறி ஆரம்பவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்கிளை, ஐந்தாவது வருடமாக நடாத்திவரும் கல்வி நெறிகள் இன்று 1ம் திகதி மு-ப 10-00 மணிக்கு புனர்வாழ்வு, புனரமைச்சின் திட்டமிடல் அதிகாரிதிரு எஸ் பத்மநாதனுல் ஆரம்பித்து வைக்கப்படும். தட்டச்சு, சுருக்கெழுத்து [ஆங்கிலம் தமிழ்] ஆங்கிலம், சித்திரம், ஒவியம் ஆகிய கல்வி நெறிக்கு 150 மாணவர்கள் பதிவு செய்துள்ளார்கள். சி

## பலதும் பத்தும்

### கூந்தல் வளர...!

கேரளத்து மக்கள் அழகாக உள்ளார்கள் என்பது பொதுவான கணிப்பு. ஏன் தெரியுமோ? தேய்காய் நெய்யை அதிகம் பயன்படுத்துகிறுர்கள்.

அது ..... பாதுகாப்பானது; குளுமை அளிப்பது; தலைமுடியை மிருதுவாக வைத்து ஈரப்பசுமையை அளிக்கிறது வரண்ட வடபகுதியில் நல்லெண்ணெ குளிர்ச்சியூட்டி, மூளையை வலுப்படுத்துகிறது என்பது எம்மவர் கருத்து.

எந்த எண்ணெயென்றுலும்..... அவசரத்தில் அள்ளி அப்பிக்கொண்டாற் பயனளிக்காதாம். 'மசாஜ்' செய்தால் தான், இரத்த ஓட்டம் அதிகரித்து, மயிர்க்கால்களுக்கு ஊட்டச் சத்துச் செல்லும். விரல் நுனியால்...... வட்ட வடிவில்... சுற்றிச் சுற்றி மிருதுவாக அழுத்துவதே 'மசாஜ்' உள்ளங்கையால் அழுத்தித் தேய்ப்பதோ, தலைமுடியை இழுத்துத் தேய்ப்பதோ நல்லதல்லவாம்!

— மயூரன்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-04-01

சனி இரவு

08-02 பரட்சிக் குரல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 கலந்துரையாடுவோம்- ''இன்றைய போக்குவரத்துப் பிரச்னைகள்''

1995-04-02

ஞாயிறு காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 களதகில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 புத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

1995-04-01

சனி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் வினுப் போட்டி
06-00 சிந்தனைக்குச் சில விடைகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவு
6-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### தவக்கால நற்சிந்தனை

''உனக்கு விசுவாசமிருந்தால், கடவுளின் மகிமையைக்காண்பாய் என்று நான் சொல்லவில்லையா?''

(அரு. 11:)

துடிப்புள்ள விசுவாசம், விசுவாச வாழ்வு நம்மை வாழ்விக்கவேணடும். செத்த விசுவாசம் நம்மை வாழ்விக்காது. விசுவாசத்தில் நிலைத்திருந்தால் தான், நாம் அவரை அடையமுடியும். விசுவாசியாதவன் அவரை என்றுமே அடையமுடியாது.

— தா. மைதிலி

# ஆயிரம் அ. அட்டைகள் யாழ். வந்து சேர்ந்தன

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களின் மேலும் ஆயிரம் அடையாள அட்டைகள் யாழ் செயலகத்திற்கு நேற்று வந்து சேர்ந்துள்ளன.

இதேவேளை கடந்த வாரம் இங்கு வந்து சேர்ந்த [3,100 அடையாள அட்டைகளும் அந்தந்த அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. -71-ரி

# இலங்கைப்பெண்களுக்கு சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு

[கொழும்பு]

சிங்கப்பூரில் பணிபுரியும் பிலிப்பைன்ஸ் பணிப்பெண்கள் நாடு திரும்புவதையடுத்து இலங்கைப் பணிப்பெண்களுக்கு சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது.

முப்பதாயிரம் பணிப்பெண்களை சிங்கப்பூருக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ரி

# முஸ். பிரச்னையைதீர்த்தே இனப் பிரச்சனையை தீர்க்க முடியும்

– அஷ்ரப்

(கொழும்பு)

முஸ்லிம்களின் பிரச்னையை தீர்த்தே இனப்பிரச்னையை தீர்க்கமுடியுமென்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் பதவி எமது இலட்சியத்திற்கு தடையல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ரி

# செல்வாநினைவு ஸ்தூபியில் மக்கள் நேற்று அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தந்தை எஸ். ஜே. வி, செல்வநாயகத்தின் 97-வது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்றுக்காலை 9-மணிக்கு யாழ்.பணம் கோட்டை அருகில் அமைந்திருக்கும் தந்தை செல்வா நினைவுஸ்தூயில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பெருந்தொகையானமக்கள் கலந்து கொண்ட இந்த அஞ்சலி நிகழ்வில் பல பெரியோர்களால் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டன. கலாநிதி க. கனகராசா, திரு. சிவமகாராசா, திரு. சதாசிவம் உட்படப் பல பிரமுகர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டு தந்தை செல்வா நினைவு ஸ்தூபிக்கு மலர் மாலை அணிவித்து. மலரஞ்சலி செலுத்தினர்கள். -162-ரி

## ஓய்வூதிய வவுச்சர்

[மானிப்பாய்]

யாழ் மாவட்ட ஓய்வூதியர்களின் ஏப்ரல் மாதத்திற்குரிய ஓ" வூதிய வவுச்சர்கள் வந்து சேர்ந்துள்ளன.

இவற்றை தரம்பிரித்து உரியவர்களுக்கு அனுப்பும் முயற்சியில் ஓய்வூதியப் பிரிவு உத்தியோகத்தாகள் ஈடுபட்டுள்ளனர். 72

## ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதையை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடுவதென்பது பூநகரி இராணுவ முகாம் மீதான நெருக்குதலை அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ளார். -க.சி-ரி

## உதைபந்தாட்ட போட்டிகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்தமாக யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினல் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடாத்தப்பட்டுவந்த உதைபந்தாட்டப் போட்டிகள் யாவும் ஒத்திவைக்கப்பட்டுள் ள தா க சங்க செயலாளர் திரு. எம். பிரான்ஸிஸ் தெரிவித்தார்.

இதேவேளை புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்காக இச்சங்கம் நடாத்தவிருக்கும் மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை திட்டமிட்டபடி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் சென், பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வி-ரி

## தலைவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்து வருகின்றோம் என்றும் கூறிய அமைச்சர் இனிமேல் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு செல்லவேண்டிய அரசாங்க தூதுக் குழுவில் இடம்பெற வேண்டியவர்கள் யாரென்பதையும் ஆராய்வதாகவும் தெரிவித்தார். ரி

## வெட்டுப்புள்ளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் சென்ற இவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தில் வெட்டுப்புள்ளி முறையால் பல்கலைக்கழக அனுமதியில் ஏற்படும் பாரபட்சங்களை தெளிவாக அமைச்சருக்கு சுட்டிக் காட்டினர்கள்.

இச்சந்திப்பின் போது பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு உறுப்பினர்களும் பங்கு பற்றினர்கள்.

இந்த மாணவர்களின் பிரச்னைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவருவதாக அமைச்சர் மாணவர்களுக்கு உறுதியளித்தார். -ரி

# தமிழகத்திலுள்ள சிறப்பு முகாம்களில் தமிழ் அகதிகளை வதைக்கிறது அரசு

## நீதியரசர் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழகத்தில் வேலூர் முகாமில் கடந்த நான்கு ஆண்டுகளாக 200 க்கும் மேற்பட்ட அகதிகள் கொடுமையான சூழலில் வாழ்கிருர்கள். அங்கே உள்ள பத்துவயதுச் சிறுவர்கள்கூட பள்ளிசென்று படிக்க அனுமதியில்லை. சில இளைஞர்கள் மனநோயாளர்களாகிவிட்டனர். இவ்வாறு தமிழக நீதியரசர் வீ. ஆர். கிருஷ்ணஐயர் தெரிவித்தார்.

இத்தகைய கொடுமைகளிலிருந்து தப்பவேண்டுமானல் இலங்கைத்தீவுக்கு திரும்பிப்போ என்று கொக்கரிக்கிறது தமிழகஅரசு ஏற்கனவே இலட்சக்கணக்கான மக்கள் வீடிழந்து இலங்கையிலே அகதிகளாக தவிக்கிருர்கள். எனவே இலங்கையில் அமைதி திரும்பும்வரை தமிழன் இரண்டாம் தர குடிமகனுக அல்லாமல் அனைத்து உரிமைகளும் பெற்று தலை நிமிர்ந்து வாழும் காலம்வரை அகதிகளை திருப்பி அனுப்பக்கூடாது என்றும் என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகள் களையப்படவேண்டும் தமிழ் அகதிகள் வாழும் முகாம்களில் குடிநீர் வசதி கழிப்பிட வசதிகள் சீர்கெட்டு இருக்கின்றன. அவற்றை சீர்படுத்துவதில் மாநில அரசு அக்கறை காட்டுவதில்லை. மேலும் போராளிகள் அவர்களது ஆதரவாளர்களைக் கைது செய்வதாகக் கூறி முகாம்களில் உள்ள அப்பாவி அகதிகளைப் பிடித்து சிறப்பு முகாம்கள் என்னும் சிறைகளில் அவர்களை வைத்து வதைக்கிறது தமிழக அரசு. -ரி

# பேச்சுக்களை தொடருமாறு கத். பேராயர்கள் கோரிக்கை

(கொழும்பு)

பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு . அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் கத்தோலிச்க பேராயர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இப்பேச்சுவார்த்தைகள் எவ்வளவு சிரமமானதாகவும், கடுமையானதாக இருந்தாலும் கூட சமாதானத்தை விரைவில் அடையக்கூடிய வகையில் இலங்கை மக்கள் கௌரவம், நீதி ஆகியவற்றுடன் சமாதானத்தை அனுபவிக்கக்கூடிய வகையில பேச்சுவார்த்தைகளை தொடர வேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

இதேவேளை பாப்பரசர் இலங்கையில் அமைதி நிலவ வேண்டும் என்று தான் பிரார்த்தனை செய்வதாக தெரிவித்துள்ளார். (ரி)

## இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராளி சிறினிவாசனை சோதனையிட வேண்டுமெனக் கூறிய பொலிசார் அவரது பையை எடுத்து சோதித்தனர். பையில் ஒரு சிறிய டோர்ச்லைட் இருந்தது. இதனைக் கண்ட பொலிசார் நீ விடுதலைப்புலியா? எனக் கேட்டனர் அதற்கு அப்போராளி தான் விடுதலைப் புலி உறுப்பினர் என்பதை ஆகாரத்துடன் உறுதிப்படுத்தினர்.

இதன்பின் அப்போராளியை தகாத வார்த்தைகளால் ஏசிய பொலிசார் அவரது மிதிவண்டியை காலால் உதைத்து தள்ளினர். இதனைத் தொடர்ந்து போராளி "உங்களைத் தாக்கும்படி எங்களுக்குக் கூறவில்லை. நீங்கள் என்னைத் தாக்கினல் நான் சயனைட் அருந்தி இறப்பேன்" எனக் கூறினர்.

இதைப் பொருட்படுத்தாத பொலிசார் தாம் வைத்திருந்த தடியால் போராளியைத் தாக்கினர். இதன்போது அப்போராளி சயனைட் அருந்தி வீரச்சாவு அடைந்தார்,

மண்டூரைச் சேர்ந்த தம்பிராசா நவநீதன் என அழைக்கப்படும் லெப். சிறினிவாசன் என்ற போராளியே இச்சம்பவத்தில் வீரச்சாவு அடைந்தவராவார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி 8ம் திகதி அமுலுக்குவந்த போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் பாரியதொரு சம்பவமாக இது நடைபெற்றுள்ளது.

இதுவரை மன்னரில் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர் ஒருவரைக்கொன்றது, மீனவர்கள்மீது தாக்குதல் நடத்தியது. அவர்களை கைது செய்தது, தென் தமிழீழத்தில் தமிழ்மக்கள்மீதும் போராளிகள் மீதும் கெடுபிடிகளை பிரயோகித்ததுபோன்ற போர் இடை நிறுத்த மீறல் சம்பவங்களிற் ஈடுபட்டுவந்த சிறிலங்கா படையினர் கடந்த புதன்கிழமை நடத்திய பாரிய போர் இடைநிறுத்த மீறல் சம்பவம் இதுவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. -ரி

## அடுத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடன் நடைபெறும் அடுத்த கட்டப் பேச்சுக்கு ஜனதிபதியின் செயலர் திரு. பாலபெத்தபெண்டிக்க பதிலாக மூத்த அமைச்சர் ஒருவர் அரசு தரப்புக்கு தலைமை வகிப்பார் என அரசு தரப்பு உறுதிசெய்துள்ளது, ரி

## வடகிழக்கு

1ம் பக்கத்தொடர்ச்சி)

கள்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழ மக் மக்கள் ஜனநாயக கட்சி, ஐ. தே. க. ஆகியவற்றைச் சேர்ந்த எம். பி. க்கள் சுலந்துகொண்டனர். -ரி

## அமைச்சர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்த சம்பவம் குறித்து எங்கள் பலமான எதிர்ப்பை தெரிவிக்க இதனை எழுது எழுதுகிறேன்.

சிறினிவாசன் என்ற எங்கள் போராளி குருமன்வெளி பொலிசாரால் எவ்வித காரணமுமின்றி கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் தன்னை ஒரு விடுதலைப் புலிகள் இயக்க போராளி என இனம் காட்டியும் அடித்தால் நஞ்சருந்தி இறப்பேன் என ச்சரித்தும் கூட அவர் தாக்கப்பட்டுள்ளார்.

இந்த அவமதிப்பின் விளைவால் இப்போராளி சயனைட் அருந்தி வீரச்சாவு அடைந்துள்ளார்.

இச் சம்பவம் மோதல் தவிர்ப்பு மீறல் என்பதை வலியுறுத்தும் அதேவேளை இது போல் மேலும் சம்பவங்கள் நடக்காது உறுதிசெய்யும் விதத்தில் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்றும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். ரி

## பாலர்களுக்கு சத்துணவு

(கொழும்புத்துறை)

பருத்தித்துறைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் பாலர்களுக்குத் தொடர்ந்தும் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது.

## காணமல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடைந்தது.

மேற்படி ஆணைக் குழுக்கவின் முன் சமர்ப்பிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் இன்னும் விசாரணை செய்யப்படாததினல் ஆணைக் குழுக்களின் பணியை இன்னும் பல மாதங்களுக்கு நீடிக்கும்படி பொதுமக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

மலைநாட்டுப் பகுதியின் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ரி. சுந்தரலிங்கம் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில்:

மலையகப் பகுதியில் மட்டும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட காணமல் போனேர் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆனல் கடந்த நான்கு மாதங்களில் ஐம்பது முறைப்பாடுகளை மட்டுமே விசாரணை செய்ய முடிந்துள்ளது. விசாரணைகளை துரிதப்படுத்த முடியாதபடி பல இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் தடையாக இருந்து வருகின்றார்கள்.

1980-க்கும் 1990-க்கும் இடையில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் காணமல் போயுள்ளார்கள். ஜே. வி. பி கிளர்ச்சியை அடக்குவதற்காக முன்னைய அரசும் பாதுகாப்புப் படையினரும் மறைமுகமாக இயங்கிவந்த பாதாள உலக மரணப்படையுமே இதற்கு முழுப் பொறுப்பாக இருந்துள்ளனர். அவ்வாறன இராணுவ பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள் முன்னைய அரசாங்கத்தினல் வழங்கப்பட்டதனல் அவர்களே தற்போது இடையூறுகளை ஏற்படுத்தி விசாரணைக் கமிஷன் முன்பு சாட்சியமளிக்க வரும் பொதுமக்களை மிரட்டி வருவதாகவும் எமக்குத் தற்போது முறைப்பாடுகள் வந்துள்ளன என்று கூறினர். -வி-இ-ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under Licence Number B/16?3613